# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1982 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, கடல்மார்க்கமாகப் பண்டங்களை ஏற்றிச் செல்லுதற் சட்டம்

---

*[1982, மே மாதம் 21 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1982, மே மாதம் 21 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 90 தபாற் செலவு : சதம் 50

# 1982 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, கடல்மார்க்கமாகப் பண்டங்களை ஏற்றிச்செல்லுதற் சட்டம்

[1982 மே மாதம் 21 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 3/81
1445

கடல்மார்க்மாகப் பண்டங்கள் ஏற்றிச்செல்லுதல் தொடர்பான சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்.

ஏற்றுபொருள் உண்டியல்கள் தொடர்பிலான குறித்தசில விதிகளை ஒன்றிணைப்பதற்கான வரைவுச் சமவாயமொன்றினை, சமவாயமொன்றுக்கான அடிப்படையாக அங்கீகரித்தேற்றுக்கொள்ளுமாறு, தத்தமது அரசாங்கங்களுக்கு விதந்துரைப்பதென, 1922, ஒற்றோபரில் பிரசல்சில் நடைபெற்ற கடல்சார் சட்டம் பற்றிய சர்வதேச மாநாட்டுப் பேராளர்கள் அம்மாநாட்டில் ஏகமனதாக உடன்பட்டுக்கொண்டனராதலாலும்:

1923, ஒற்றோபரில் பிரசல்சில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், சொல்லப்பட்ட வரைவுச் சமவாயத்தில் அடங்கியுள்ள விதிகள் சொல்லப்பட்ட மாநாட்டினால் நியமிக்கப்பட்ட குழுவினால் திருத்தப்பட்டனவாதலாலும்:

(85 ஆம் அத்தியாயமான) கடல்மார்க்கமாகப் பண்டங்களை ஏற்றிச் செல்லுதற் கட்டளைச் சட்டத்தின் மூலம், அவ்வாறு திருத்தப்பட்டவாறுனவையும் அக்கட்டளைச்சட்டத்துக்கான அட்டவணையில் திரிபுபடுத்தல்களுடன் தரப்பட்டுள்ளவாறுனவையுமான சொல்லப்பட்ட விதிகளுக்கு, ஏற்றுபொருள் உண்டியல்களின்கீழ் ஏற்றிச் செல்பவர்களுக்குள்ள வகைசொலற் பொறுப்புகளையும், பொறுப்புகளையும், உரிமைகளையும் விடுபாட்டுரிமைகளையும் நிறுவும் பொருட்டு, சட்டவலு கொடுக்கப்படுதல் வேண்டுமென ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றதாதலாலும்:

1968, பெப்புருவரி மாதத்தில் பிரசல்சில் நடைபெற்ற மாநாடு சொல்லப்பட்ட விதிகளுக்கான தாயேடொன்றை அங்கீகரித்தேற்றுக்கொண்டுள்ளதாதலாலும்:

அவ்வாறு திருத்தப்பட்டவாறுனவையும், இச்சட்டத்துக்கான அட்டவணையில் திரிபுபடுத்தல்களுடன் தரப்பட்டுள்ளவாறுனவையுமான சொல்லப்பட்ட விதிகளுக்கு, ஏற்றுபொருள் உண்டியல்களின்கீழ் அல்லது ஏதேனும் அதையொத்த உரித்தாவணத்தின்கீழ் ஏற்றிச் செல்பவர்களுக்குள்ள வகைசொலற் பொறுப்புகளையும், பொறுப்புகளையும், உரிமைகளையும், விடுபாட்டுரிமைகளையும் நிறுவும் பொருட்டு, சட்டவலு அளித்தல் உசிதமானதாயுள்ளதாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1982 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, கடல் மார்க்கமாகப் பண்டங்களை ஏற்றிச் செல்லுதற் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறுன அத்தகைய தேதியன்று நடைமுறைக்குவருதலும்வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

2. (1) இச்சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறுன விதிகளின் ஏற்பாடுகள் சட்ட வலுவுடையனவாதல் வேண்டும். ஏற்புடைமையின் நோக்கெல்லை.

(2) ஓராம் உட்பிரிவுக்குப் பங்கமில்லாமல், சொல்லப்பட்ட ஏற்பாடுகள், இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகத்திலிருந்து, இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ உள்ள வேறு ஏதேனும் துறைமுகத்துக்குப் பண்டங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களில் கடல்மார்க்கமாகப்

பண்டங்களை ஏற்றிச் செல்லுதல் தொடர்பாகவும், அது சம்பந்தப்பட்ட வரையிலும் பயனுடையனவாதல் (அத்துடன் சட்ட வலுவுடையன வாதல்) வேண்டும்.

(3) நான்காம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஏற்றுபொருள் உண்டியல் அல்லது அதையொத்த ஏதேனும் உரித்தாவணம் வழங்கப்படு வதற்கு ஒப்பந்தமானது வெளிப்படையாக அல்லது உட்கிடையாக ஏற் பாடு செய்தாலன்றி, இப்பிரிவில் உள்ளது எதுவும் கடல்மார்க்கமாகப் பண்டங்களை ஏற்றிச் செல்லுவதற்காய ஏதேனும் ஒப்பந்தத்துக்கு இவ் விதிகளில் உள்ள எதனையும் ஏற்புடைத்தாக்குவதாகக் கொள்ளப்படுதலா காது.

(4) இவ்விதிகள் அதற்கு ஏற்புடையனவாகும் ஏதேனும் ஒப்பந்தத் தைக் கொண்டிருப்பதான, அல்லது அத்தகைய ஒப்பந்தம் பற்றிய சான் ருகவமைவதான இலங்கையில் வழங்கப்பட்ட ஒவ்வோர் ஏற்றுபொருள் உண்டியலும் அல்லது அதையொத்த உரித்தாவணமும், இச்சட்டத்தினுல் ஏற்புடைத்தாக்கப்படுகின்றவாருன விதிகளின் ஏற்பாடுகளுக்கு அமை வாக அது பயனுடையதாதல் வேண்டுமென்ற வெளிப்படையான கூற் றென்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விதிகளின் VI ஆம் உறுப்புரையை கரையோர வியாபாரம் தொடர்பாகத் திரிபுபடுத்தல்.

3. விதிகளின் VI ஆம் உறுப்புரையானது, இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகத்திலிருந்து இலங்கையிலுள்ள வேறு ஏதேனும் துறைமுகத்துக் குப் பண்டங்களை ஏற்றிச்செல்லும் கப்பல்களில் கடல்மார்க்கமாகப் பண் டங்களை ஏற்றிச்செல்லுதல் தொடர்பாக, சொல்லப்பட்ட உறுப்புரை குறிப்பான பண்டங்களுக்குப் பதிலாக ஏதேனும் வகுப்பைச் சார்ந்த பண்டங்களுக்கு குறிப்பீடு செய்கின்றதென்றாற்போன்றும், அத்தகைய உறுப்புரையின் இரண்டாவது பந்திக்கான காப்புவாசகம் விட்டுவிடப் பட்டது என்றாற்போன்றும், பயனுடையதாதல் வேண்டும்.

விதிகள் ஏற்புடையனவாகும் ஒப்பந்தங்களில் கடல்வழிச் செலற்றகுதி பற்றிய பூரண கட்டுறுத்து உட்கிடையானதாகப் பெறப்படுதலாகாது.

4. இவ்விதிகள் ஏற்புடையனவாகும் கடல்மார்க்கமாகப் பண்டங்களை ஏற்றிச் செல்வதற்கான ஏதேனும் ஒப்பந்தத்தில், கடல் வழிச்செலற்றகுதி யுடைய கப்பலொன்றை ஏற்பாடு செய்வதற்கான பண்டங்களை ஏற்றிச் செல்பவரது பூரணமான பொறுப்பெதுவும் உட்கிடையாகப் பெறப்படுவ தாதலாகாது.

பேணல்களும் செயற்பாடும்.

5. இச்சட்டத்திலுள்ளது எதுவும், கடலில் செல்லும் கலங்களின் சொந்தக்காரர்களுக்குள்ள பொறுப்பை மட்டுப்படுத்தும் அப்போதைக்கு வலுவில் இருக்கின்ற வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின் செயற்பாட் டினைப் பாதித்தலாகாது.

85 ஆம் அத்தியாயத்தை நீக்கஞ்செய்தல்.

6. கடல் மார்க்கமாகப் பண்டங்களை ஏற்றிச் செல்லுதற் கட்டளைச் சட்டம் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.

பொருள்கோடல்.

7. இச்சட்டத்தில் "விதிகள்" என்பது, 1968 ஆம் ஆண்டு பெப்ருவரி 23 ஆந் தேதியன்று பிரசல்சில் ஒப்பமிடப்பட்ட தாயேட்டின்மூலம் திருத்தப்பட்டவாருன 1924 ஆம் ஆண்டு ஓகத்து 25 ஆந் தேதியன்று பிரசல்சில் ஒப்பமிடப்பட்டதும் இதற்கான அட்டவணையில் தரப்பட் டுள்ளதுமான ஏற்றுபொருள் உண்டியல்கள் தொடர்பாகக் குறித்த சில விதிகளை ஒன்றிணைப்பதற்கான சர்வதேசச் சமவாயம் என்று பொருள் படும்.

## அட்டவணை

### 1968 ஆம் ஆண்டின் பிறசல்சுத் தாயேட்டினால் திருத்தப்பட்டவாறான ஹேக்கு விதிகள்

### உறுப்புரை I

இவ்விதிகளில் பின்வருஞ் சொற்கள் கீழே தரப்பட்ட கருத்துக்களுடன் கையாளப்பட்டுள்ளன :—

(அ) "ஏற்றிச் செல்பவர்" என்பது, கப்பலேற்றுபவரோடு ஏற்றிச் செல்வதற்கான ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்ளுகின்ற சொந்தக்காரரை அல்லது வாடகைக்கமர்த்துபவரை உள்ளடக்கும்;

(ஆ) "ஏற்றிச் செல்வதற்கான ஒப்பந்தம்" என்பது, ஏற்றிச் செல்பவர் ஒருவருக்கும் ஏற்றுபொருள் உண்டியலை அல்லது அதையொத்த வேறு உரித்தாவணத்தை வைத்திருப்பவர் ஒருவருக்கும் இடையேயுள்ள உறவுகளை அவ்வேற்றுபொருள் உண்டியல் அல்லது உரித்தாவணம் ஒழுங்குபடுத்துகின்ற நேரத்திலிருந்து, கப்பல் வாடகை ஒப்பந்தத்தின் கீழ் அல்லது அவ்வொப்பந்தத்தினைப் பின்பற்றி வழங்கப்பட்ட மேற்சொல்லப்பட்டவாறான ஏதேனும் ஏற்றுபொருள் உண்டியல் அல்லது அதையொத்த வேறு உரித்தாவணம் உட்பட, ஏற்றுபொருள் உண்டியலினால் அல்லது அதையொத்த ஏதேனும் உரித்தாவணத்தினால், அவ்வாவணம் கடல்மார்க்கமாகப் பண்டங்களை ஏற்றிச்செல்லுதல் தொடர்பானதாகவிருக்கும் அளவுக்கு, உள்ளடக்கப்படும் ஏற்றிச்செல்வதற்கான ஒப்பந்தங்களுக்கு மாத்திரம் ஏற்புடையனவாகும்.

(இ) "பண்டங்கள்" என்பது, ஏற்றிச்செல்வதற்கான ஒப்பந்தத்தின் மூலம் கப்பற்றளத்தில் ஏற்றிச்செல்லப்படுவதாகக் கூறப்படுவதும் அவ்வாறு ஏற்றிச்செல்லப்படுவதுமான, உயிருள்ள விலங்குகள், கப்பற் சரக்கு என்பன தவிர்ந்த, பண்டங்களையும், களஞ்சியப் பொருட்களையும், வியாபாரப் பொருட்களையும், அத்துடன் எத்தன்மைத்தானதுமான ஒவ்வொரு பொருளையும் உள்ளடக்கும்.

(ஈ) "கப்பல்" என்பது, கடல்மார்க்கமாகப் பண்டங்களை ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் கலம் என்று பொருளாகும்.

(உ) "பண்டங்களை ஏற்றிச் செல்லுதல்" என்பது, பண்டங்கள் கப்பலில் ஏற்றப்பட்ட நேரத்திலிருந்து அவை கப்பலிலிருந்து இறக்கப்படும் நேரம் வரையுள்ள காலப்பகுதியை உள்ளடக்கிநிற்கும்.

### உறுப்புரை II

ஆறும் உறுப்புரையினது ஏற்பாடுகளுக்கமைவாக, கடல்மார்க்கமாகப் பண்டங்களை ஏற்றிச்செல்வதற்கான ஒவ்வோர் ஒப்பந்தத்தின்கீழும், ஏற்றிச்செல்பவர், அத்தகைய பண்டங்களைக் கப்பலில் ஏற்றுதல், கையாளல், களஞ்சியப்படுத்துகை, ஏற்றிச்செல்லுகை, கட்டுக்காப்பு, கவனிப்பு, இறக்குதல் என்பன தொடர்பாக, இதனகத்துப்பின்னர் எடுத்துக்காட்டப்பட்டுள்ள வகைசொலற் பொறுப்புகளுக்கும், பொறுப்புகளுக்கும் அமைந்தவராதலும், அவ்வாறு காட்டப்பட்டுள்ள உரிமைகளுக்கும், விடுபாட்டுரிமைகளுக்கும் உரித்துடையவராதலும் வேண்டும்.

### உறுப்புரை III

1. ஏற்றிச்செல்பவர், பயணந் தொடங்குமுன்னரும், தொடங்கும்போதும்—

(அ) கப்பலை கடல்வழிச் செலற்றகுதியுடையதாக்குவதற்கும்;

(ஆ) கப்பலுக்கு வேண்டிய ஆளணியினரையும், உபகரணத்தையும், வழங்கு பொருள்களையும் ஏற்பாடு செய்வதற்கும்;

(இ) கப்பற்றளவறைகளையும், குளிரூட்டப்பட்ட அறைகளையும், கப்பலிற் பண்டங்கள் ஏற்றிச்செல்லப்படுவனவான கப்பலின் வேறு எல்லாப் பாகங்களையும், அப்பண்டங்களை ஏற்று, காவிச்சென்று பேணுவதற்கு ஏற்றவகையில் தகுந்தனவாக்குவதற்கும், பாதுகாப்பானவையாக்குவதற்கும்,

போதுமான விழிப்புக்கவனத்தைப் பிரயோகிக்கப் பிணிக்கப்பட்டவராதல் வேண்டும்.

2. நான்காம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைவாக, ஏற்றிச் செல்பவர், ஏற்றிச் செல்லப்படும் பண்டங்களை தகுந்த முறையிலும், கவனத்துடனும், கப்பலில்ஏற்றி, கையாண்டு, களஞ்சியப்படுத்திவைத்து, காவிச்சென்று, வைத்திருந்து, பராமரித்து, இறக்குதல் வேண்டும்.

3. ஏற்றிச்செல்பவர் அல்லது ஏற்றிச்செல்பவரது கப்பற்றலைவர் அல்லது முகவர் தமது பொறுப்பிற்கு பண்டங்களை எடுத்துக்கொண்ட பின்னர், கப்பலேற்றுபவரது கோரிக்கைமீது, ஏனையவற்றுடன்—

(அ) அத்தகைய பண்டங்களை கப்பலில் ஏற்றுதல் தொடங்குவதற்குமுன்னர் கப்பலேற்றுபவரால் எழுத்தில் கொடுத்துதவப்பட்ட அவையேயான பண்டங்களை அடையாளங் காணுவதற்கவசியமான (ஆயின், பயண முடிவுவரையிலும் சாதாரணமாகத் தெளிவாகத்தெரியக்கூடிய அத்தகைய முறையில், அத்தகைய குறிகள் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்; அல்லது பண்டங்கள் மூடப்படாதிருந்தால் பண்டங்கள்மீதும் அல்லது பண்டங்களை உள்ளடக்கியுள்ள பெட்டிகளில் அல்லது மூடு பொருட்களில் தெளிவாக வேறுவகையில் அவை காட்டப்பட்டிருத்தல் வேண்டும்) வழிகாட்டுக்குறிகளையும்;

(ஆ) கப்பலேற்றுபவரினால் எழுத்தில் கொடுத்துதவப்பட்டவாறான, விடயத்துக்கேற்றவாறு, ஒன்றில் பொதிகளின் அல்லது துண்டுகளின் எண்ணிக்கையையும், அல்லது அளவு அல்லது நிறையையும்;

(இ) பண்டங்களின் வெளித்தோற்றமுறையான ஒழுங்கையும் நிலைமையையும், காட்டுவதான ஏற்றுபொருள் உண்டியலொன்றைக் கப்பலேற்றுபவருக்கு வழங்குதல் வேண்டும்:

ஆயின், ஏற்றிச்செல்பவர், ஏற்றிச் செல்பவரது கப்பற்றலைவர் அல்லது முகவர் எவரும், உள்ளபடியாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பண்டங்களைச் செம்மையாகக் குறிக்கவில்லையெனத் தாம் ஐயுறுவதற்கு நியாயமான காரணமுள்ள அல்லது அவர் சரிபார்த்தறிந்துகொள்ளுவதற்கு நியாயமான வழிவகைகள் இல்லாதிருந்தவையான எவையேனும் குறிகளை, எண்ணிக்கையை, அளவை அல்லது நிறையை ஏற்றுபொருள் உண்டியலில் கூறுவதற்கு அல்லது காட்டுவதற்கு பிணிக்கப்பட்டவராதலாகாது.

4. அத்தகைய ஏற்றுபொருள் உண்டியலொன்று 3 (அ), (ஆ), (இ) என்னும் பந்திகளுக்கிணங்க அதன்கண் விபரிக்கப்பட்டுள்ளவாறான பண்டங்களை ஏற்றிச் செல்பவர் பெற்றுள்ளார் என்பதற்கு முதற்றோற்றச்சான்றாதல் வேண்டும். எவ்வாறாயினும், நன்னோக்கத்துடன் செயற்படும் மூன்றாம் திறத்தவரொருவருக்கு ஏற்றுபொருள் உண்டியல் கைமாற்றஞ்செய்யப்பட்டுள்ளபோது அதற்கு முரணான என்பிப்பு அனுமதிக்கப்படற்பாலதாதலாகாது.

5. கப்பலேற்றுபவர், கப்பலேற்றும் நேரத்தில் அவரால் கொடுத்துதவப்பட்ட வாறான குறிகள், எண்ணிக்கை, அளவு, நிறை பற்றிய செம்மைக்கு ஏற்றிச்செல் பவருக்கு உத்தரவாதமளித்துள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன் கப்பலேற்றுபவர் அத்தகைய விபரங்களிலான செப்பமின்மைகள் காரணமாக எழும் அல்லது விளையும் சகல இழப்புகள், சேதங்கள், செலவுகள் என்பவற்றுக் கெதிராக ஏற்றிச்செல்பவருக்கு நட்டோத்தரவாதமளித்தல் வேண்டும்.

அத்தகைய நட்டோத்தரவாதத்தைப் பெறுவதற்கான ஏற்றிச் செல்பவரது உரிமை, கப்பலேற்றுபவர் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளின்பால் ஏற்றிச்செல்லு தல் ஒப்பந்தத்தின் கீழ் அவருக்குள்ள வகைசொலற்பொறுப்பையும், பொறுப்பை யும் எவ்வகையிலும் மட்டுப்படுத்துதலாகாது.

6. ஏற்றிச்செல்லுதல் ஒப்பந்தத்தின்கீழ் பண்டங்களின் ஒப்படைப்பைப் பெறு வதற்கு உரித்துடைய ஆளினது கட்டுக்காப்புக்கு அப்பண்டங்களை அகற்று முன்னர் அல்லது அகற்றும் நேரத்தில், அல்லது இழப்பு அல்லது சேதம் வெளித் தோன்றுவதாகவிராதவிடத்து மூன்று நாட்களுள், பண்டங்கள் இறக்கப்படும் துறைமுகத்தில், ஏற்றிச்செல்பவருக்கு அல்லது அவரது முகவருக்கு, இழப்பு அல்லது சேதம் பற்றிய எழுத்திலான அறிவித்தலையும், அத்தகைய இழப்பு அல்லது சேதத்தின் பொதுவானதன்மை பற்றிய அறிவித்தலையும் கொடுத்தா லொழிய, அவ்வாறு பண்டங்கள் அகற்றுகையானது, ஏற்றுபொருள் உண்டியலில் விபரிக்கப்பட்டுள்ளவாறாகப் பண்டங்களை ஏற்றிச்சென்றவர் ஒப்படைத்தமைக் கான முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.

அப்பண்டங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட நேரத்தில் அவற்றின் நிலைமைபற்றி கூட்டான மதிப்பிடுகை அல்லது பார்வையிடுதல் நடைபெற்றிருந்தால், எழுத்தி லான அறிவித்தல் கொடுக்கப்படவேண்டியதில்லை.

6அ என்னும் பந்திக்கமைவாக, ஏற்றிச் செல்பவரும் கப்பலும், எச் சந்தர்ப்பத் திலும், பண்டங்கள் ஒப்படைக்கப்பட்டதிலிருந்து அல்லது பண்டங்கள் ஒப்ப டைக்கப்பட்டிருக்கவேண்டியதான தேதியிலிருந்து ஓராண்டுக்குள் துடர்ச்சி கொணரப்பட்டிருந்தாலொழிய, பண்டங்கள் தொடர்பிலான எத்தன்மைத்தேனு மான எல்லாப் பொறுப்பினின்றும் விடுபட்டவராக அல்லது விடுபட்டதாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், வழக்குக்காரணம் எழுந்தபின்னர் திறத்த வர்கள் அவ்வாறு உடன்பட்டுக்கொண்டால், இக்காலப்பகுதி நீடிக்கப்படலாம்.

உள்ளபடியான இழப்பு அல்லது சேதம் நேர்ந்திருக்கின்ற விடயத்தில் அல்லது நேர்ந்துள்ளதென அஞ்சப்படுகின்ற விடயத்தில், ஏற்றிச் செல்பவரும், பண் டங்கள் பெறுநரும், அப்பண்டங்களைப் பார்வையிடுவதற்கும் ஒத்துப்பார்ப்பதற் கும் வேண்டிய நியாயமான வசதிகளை ஒருவருக்கொருவர் அளித்தல் வேண்டும்.

6அ. மூன்றாம் ஆளொருவருக்கு எதிராக நட்டோத்தரவாதத்திற்கான வழக் கொன்று, வழக்கை விசாரணை செய்யும் நீதிமன்றத்தின் சட்டத்தினால் அனுமதிக் கப்பட்ட காலத்துள் கொண்டுவரப்பட்டால், முற்போந்த பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட ஆண்டு முடிவடைந்ததன்பின்னருங்கூடக் கொண்டுவரப்படலாம். எவ்வாறாயினும், அனுமதிக்கப்பட்ட கால அவகாசமானது, நட்டோத்தரவாதத் துக்கான அத்தகைய வழக்கைக் கொண்டுவரும் ஆள் உரிமைக்கோரிக்கைத் தொகையை நிர்ணயித்துள்ள நாளிலிருந்து அல்லது அவருக்கு எதிரான வழக் கில் மன்றாணை சேர்ப்பிக்கப்பட்டுள்ள நாளிலிருந்து தொடங்குவதாக மூன்று மாதங்களுக்குக் குறைவாக இருத்தலாகாது.

7. பண்டங்கள் கப்பலில் ஏற்றப்பட்டதன்பின்னர், கப்பலேற்றுபவருக்கு, ஏற் றிச் செல்பவரால், ஏற்றிச்செல்பவரது கப்பற்றலைவரினால் அல்லது முகவரினால் வழங்கப்படவேண்டிய ஏற்றுபொருள் உண்டியலானது, கப்பலேற்றுபவர் அவ் வாறு கோரினால், “கப்பலேற்றப்பட்ட” ஏற்றுபொருள் உண்டியலாக இருத்தல் வேண்டும். ஆயின், கப்பலேற்றுபவர் அப்பண்டங்களுக்கான உரித்தாவண மெதனையும் முன்னர் பெற்றிருந்திருப்பாரானால், அவர் அதனை “கப்பலேற்றப் பட்ட” ஏற்றுபொருள் உண்டியல் வழங்குகைக்குப் பிரதிமாற்றாகக் கையொப்ப

டைத்தல் வேண்டும். ஆனால் ஏற்றிச்செல்பவரது விருப்புத் தெரிவின்பேரில், எக் கப்பலில் அல்லது கப்பல்களில் பண்டங்கள் ஏற்றப்பட்டுள்ளனவோ அக்கப்பலின் அல்லது கப்பல்களின் பெயரையும் அல்லது பெயர்களையும், கப்பலேற்றப்பட்ட தேதியையும், அல்லது தேதிகளையும் ஏற்றிச்செல்பவர், கப்பற்றலைவர் அல்லது முகவர் கப்பலேற்று துறைமுகத்தில் வைத்து அத்தகைய உரித்தாவணத்தின்மீது குறிப்பீடுசெய்யலாம் ; அத்துடன், அவ்வாறு குறிக்கப்பெற்றுள்ளபோது, III ஆம் உறுப்புரையின் 3 ஆம் பந்தியிற் கூறப்பட்ட விவரங்களை அது காட்டினால் அவ் வாவணமானது, இவ்வுறுப்புரையினது நோக்கத்துக்காக "கப்பலேற்றப்பட்ட" ஏற்றுபொருள் உண்டியலொன்றாக அமைவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

8. இவ்வுறுப்புரையில் ஏற்பாடுசெய்யப்பட்ட கடமைகளிலும் கடப்பாடுகளி லும் அசட்டையாகவிருத்தல் காரணமாக, தவறுதல் காரணமாக அல்லது தவறி யமை காரணமாக, பண்டங்களுக்கு ஏற்படும் அல்லது பண்டங்கள் தொடர் பாக ஏற்படும் இழப்புக்கான அல்லது சேதத்துக்கான பொறுப்பிலிருந்து ஏற் றிச்செல்பவரை அல்லது கப்பலை விலக்கிவிடுகின்ற, அல்லது இவ்விதிகளில் ஏற் பாடு செய்யப்பட்டவாறன்றி வேறு விதமாக அத்தகைய பொறுப்பினைக் குறைக் கின்ற, ஏற்றிச்செல்லுதலொப்பந்தமொன்றிலுள்ள வாசகம், உடன்பாடு அல்லது உடன்படிக்கை எதுவும் வெற்றும் வறிதுமாதல் வேண்டுமென்பதுடன், பயனற் றாதலும் வேண்டும். ஏற்றிச்செல்பவருக்குச் சாதகமாகவுள்ள காப்புறுதி நலன் அல்லது அதையொத்த வாசகம் ஏற்றிச்செல்பவரைப் பொறுப்பிலிருந்து விடு விக்கும் வாசகமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

## உறுப்புரை IV

1. மூன்றும் உறுப்புரையின் 1 ஆம் பந்தியினது ஏற்பாடுகளுக்கிணங்க, கப் பலை கடல்வழிச்செலற்றகுதியுடையதாக ஆக்குதல் தொடர்பிலும், கப்பல் முறையாக ஆளணியினரைக் கொண்டதாகவும், உபகரணமுடையதாகவும், வழங்குபொருள் உடையதாகவும் இருப்பதனை உறுதிப்படுத்துதல் தொடர்பிலும், கப்பற்றளவறைகளையும், குளிரூட்டப்பட்ட அறைகளையும், கப்பலிற் பண்டங்கள் ஏற்றிச்செல்லப்படும் கப்பலின் வேறு எல்லாப் பாகங்களையும், அப்பண்டங்களை ஏற்று, காவிச்சென்று, பேணுவதற்கு ஏற்றவகையில் தகுந்தனவாகவும் பாதுகாப் பானவையாகவும் ஆக்குதல் தொடர்பிலும், ஏற்றிச்செல்பவரது கடமையில் அவர் முறையான விழிப்புக்கவனத்தைப் பிரயோகிக்காமை காரணமாக விளைந்ததாக இருந்தாலொழிய, கடல்வழிச்செலற்றகுதியின்மை காரணமாக எழும் அல்லது விளையும் இழப்புக்கு, அல்லது சேதத்துக்கு ஏற்றிச் செல்பவரோ, கப்பலோ பொறுப்புடையவராதல் அல்லது பொறுப்படையதாதல் ஆகாது. கடல் வழிச் செலற்றகுதியின்மை காரணமாக இழப்பு அல்லது சேதம் விளைந்துள்ளவிடத்து, தாம் தகுந்த விழிப்புக் கவனத்தைப் பிரயோகித்தார் என எண்பிக்கும் பொறுப்பு ஏற்றிச்செல்பவர்மீது அல்லது இவ்வுறுப்புரையின்கீழ் விலக்களிப்பைக்கோரும் வேறு ஆள்மீதாதல் வேண்டும்.

2. பின்வருவனவற்றிலிருந்து எழும் அல்லது விளையும் இழப்புக்கு அல்லது சேதத்துக்கு, ஏற்றிச் செல்பவருஞ்சரி, கப்பலுஞ்சரி பொறுப்புடையதாதலா காது :—

(அ) கப்பலோட்டுதலில் அல்லது கப்பல் முகாமையில் ஏற்றிச்செல்பவரது கப் பற்றலைவரின், கடலாளரின், மாலுமியின் அல்லது சேவையாளரின் செயல், அசட்டை அல்லது தவறுகை ;

(ஆ) ஏற்றிச்செல்பவரது உள்ளபடியான தவறால் அல்லது உடனிணக்கத்தால் விளைந்திருந்தாலொழிய, தீ விபத்து ;

(இ) கடல்சார்ந்த அல்லது கப்பலோட்டற்குரு வேறு நீர்ப்பரப்புக்கள் சார்ந்த இடர்கள், அபாயங்கள், விபத்துக்கள் என்பன ;

(ஈ) தெய்வச் செயல் ;

(உ) போர் நடவடிக்கை ;

(ஊ) பகிரங்கப் பகைவர் செயல் ;

(எ) இளவரசர், ஆளுநர் அல்லது மக்கள் கைதுசெய்யப்படுதல் அல்லது தடுத்துவைக்கப்படுதல் அல்லது சட்டமுறை மன்றாணையின்கீழ் கைப் பற்றுகை ;

(ஏ) நோய்த்தடுப்பு மட்டுப்பாடுகள் ;.

(ஐ) கப்பலேற்றுபவரின், அல்லது பண்டங்களினது சொந்தக்காரரின், அவரது முகவரின் அல்லது பிரதிநிதியின் செயல் அல்லது தவிர்வு ;

(ஒ) பகுதியளவினதாயினுஞ்சரி பொதுவானதாயினுஞ்சரி, எத்தன்மைத்தான எக்காரணத்துக்காகவேனும் ஆன வேலை நிறுத்தங்கள், கதவடைப்புக் கள், அல்லது தொழில் நிறுத்தம் அல்லது தொழில் மட்டுப்படுத்துகை ;

(ஓ) கலகங்களும் உள்நாட்டுக்குழப்பங்களும் ;

(ஔ) கடலில் உயிரை அல்லது ஆதனத்தைக் காப்பாற்றுதல், அல்லது காப் பாற்ற முயலுதல் ;

(க) பண்டங்களின் உள்ளார்ந்த குறைபாடு, தரம் அல்லது இழிதன்மை காரணமாக ஏற்படும் மொத்த அறிவு, நிறை குறைவு அல்லது வேறு ஏதேனும் இழப்பு அல்லது சேதம் ;

(ங) பற்றாக்குறையான பொதிப்படுத்துகை ;

(ச) பற்றாக்குறையான அல்லது போதுமானவையல்லாக் குறிகள் ;

(ஞ) விழிப்புக்கவனத்தால் கண்டறியப்படமுடியாத மறைநிலைக் குறைபாடு கள் ;

(ட) ஏற்றிச் செல்பவரது உள்ளபடியான தவறு அல்லது உடனிணக்கம் இல் லாமல் அல்லது ஏற்றிச் செல்பவரது முகவரின் அல்லது சேவையாள ரின் தவறு அல்லது அசட்டை இல்லாமல் எழுவதான வேறு ஏதேனும் காரணம். ஆனால், ஏற்றிச் செல்பவரது உள்ளபடியான தவறோ உடனி ணக்கமோ, அல்லது ஏற்றிச்செல்பவரது முகவர்களின் அல்லது சேவை யாளரின் தவறோ அல்லது அசட்டையோ அவ்விழப்புக்கு அல்லது சேதத்துக்குத் துணைபுரியவில்லையெனக்காட்டுவதான எண்பித்தற் பொறுப்பானது, இவ்விதிவிலக்கின் நலனைக்கோரும் ஆளின்மீதான தாதல் வேண்டும்.

3. கப்பலேற்றுபவரின், அல்லது அவரது முகவர்களின் அல்லது அவரது சேவையாளர்களின் செயல், தவறு அல்லது அசட்டை தவிர்ந்த ஏதேனும் கார ணத்தினால் எழுந்ததும் அல்லது விளைந்ததும், ஏற்றிச் செல்பவரால் அல்லது கப்பலினால் உறப்பட்டதுமான இழப்புக்கு அல்லது சேதத்துக்குக் கப்பலேற்று பவர் பொறுப்புடையவராதலாகாது.

4. கடலில் உயிரை அல்லது ஆதனத்தைக் காப்பாற்றும்போது அல்லது காப் பாற்ற முனையும்போது ஏற்படுவதான ஏதேனும் பாதைமாற்றம் அல்லது ஏதே னும் நியாயமான பாதைமாற்றம் இவ்விதிகளின் அல்லது ஏற்றிச் செல்லுதல் ஒப்பந்தத்தின் வரம்புமீறுகையாக அல்லது மீறுகையாகக் கருதப்படுத லாகாது. அத்துடன், அதனால் விளையும் ஏதேனும் இழப்புக்கு அல்லது சேதத் துக்கு ஏற்றிச் செல்பவர் பொறுப்புடையவராதலாகாது.

5. (அ) எவையேனும் பண்டங்களின் தன்மையும் பெறுமதியும் அவை கப்ப லேற்றப்படுவதன்முன்னர் கப்பலேற்றுபவரால் வெளிப்படுத்தப்பட்டு, ஏற்றுபொருள் உண்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தாலொழிய, அப் பண்டங்களுக்கு அல்லது அப்பண்டங்கள் தொடர்பாக ஏற்படும்

ஏதேனும் இழப்புக்காக, அல்லது சேதத்துக்காக, பொதியொன்றுக்கு அல்லது அலகொன்றுக்கு 10,000 பிராங்குக்கு அல்லது இழந்துவிடப் பட்ட அல்லது சேதமுற்ற பண்டங்களின் மொத்த நிறையான ஒவ்வொரு கிலோ கிராமுக்கும் 30 பிராங்குக்குச் சமமான தொகையை (இவற்றுள் எது அதிகமானதோ அதற்கு) விஞ்சுவதான தொகைக்கு ஏற்றிச் செல்பவரோ கப்பலோ எச்சந்தர்ப்பத்திலும் பொறுப்புடையதாதல் அல்லது பொறுப்புடையதாக வருதல் ஆகாது.

(ஆ) அறவிடப்படற்பாலதான மொத்தத்தொகை, ஒப்பந்தத்துக்கிணங்கப் பண்டங்கள் கப்பலிலிருந்து இறக்கப்படும் அல்லது அவ்வாறு இறக்கப்பட்டிருக்கப்பட வேண்டியதான இடத்திலும் நேரத்திலும் அத்தகைய பொருட்களின் பெறுமதியைத் தொடர்புபடுத்தி கணிப்பீடுசெய்யப்படுதல் வேண்டும்.

பொருட்களின் பெறுமதி, பண்டமாற்று விலைக்கு இணங்க, அல்லது அத்தகைய விலையொன்று இல்லாதவிடத்து, அப்போதைய சந்தை விலைக்கு இணங்க, அல்லது பண்டமாற்று விலை அல்லது அப்போதைய சந்தைவிலை இல்லாதவிடத்து அதே வகையை அல்லது தரத்தைச் சேர்ந்த பண்டங்களின் வழமையான பெறுமதியைத் தொடர்புபடுத்தி நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

(இ) சரக்கு கொள்கலமொன்று, மாத்துடுப்பொன்று அல்லது அதனையொத்த பண்டப் போக்குவரத்துப் பொருளொன்று பண்டங்களைத் திரட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றவிடத்து, அத்தகைய பண்டப் போக்குவரத்துப் பொருளில் அடைக்கப்பட்டிருப்பனவாக ஏற்றுபொருள் உண்டியலில் எடுத்துக்கூறப்பட்ட பொதிகளின் அல்லது அலகுகளின் எண்ணிக்கையே, இப்பொதிகள் அல்லது அலகுகள் தொடர்புபட்டவரை இப்பந்தியின் நோக்கத்துக்காக பொதிகளின் அல்லது அலகுகளின் எண்ணிக்கையாகக் கருதப்படுதல் வேண்டும். மேற்சொல்லப்பட்டவாறு தவிர அத்தகைய பண்டப் போக்குவரத்துப் பொருள் பொதியாக அல்லது அலகாகக் கணிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) ஒரு பிராங்கு என்பது, 900 சகஸ்ர நுண்மாற்றுத் தங்க வகையில் 65.5 மில்லிகிராம் கொண்ட அலகொன்று எனப்பொருள்படும். தீர்த்தளிக்கப்பட்ட தொகையை தேசிய நாணயங்களுக்கு மாற்றுதல் செய்தற் தேதி, வழக்கை விசாரணை செய்யும் நீதிமன்றத்தின் சட்டத்தால் ஆளப்படுவதாதல் வேண்டும்.

(உ) சேதம் விளைவிப்பதற்கான கருத்துடன், அல்லது அசட்டுத்துணிவுடனை கவனமின்மையுடனும், பெரும்பாலும் சேதம் விளையுமெனும் அறிவுடனும் ஆன, ஏற்றிச்செல்பவரது செயலொன்றினால் அல்லது செய்யாமையினால் சேதம் விளைந்ததென எண்பிக்கப்பட்டால், இப்பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட பொறுப்பு மட்டுப்படுத்துகையின் நன்மையைப் பெறுவதற்கு ஏற்றிச்செல்பவரோ கப்பலோ உரித்துடையவராதலோ, உரித்துடையதாதலோ ஆகாது.

(ஊ) இப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில் குறிப்பிடப்பட்ட வெளிப்படுத்துகை, அது ஏற்றுபொருள் உண்டியலில் சேர்க்கப்பட்டிருந்தால், முதற்றோற்றச் சான்றுதல் வேண்டும்; ஆனால், அது ஏற்றிச் செல்பவரைப் பிணிப்பதாகவோ, அல்லது அவர்மீது முடிவானதாகவோ இருத்தலாகாது.

(எ) இப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில் குறிப்பிடப்பட்ட தொகைகளல்லாத அதியுச்சத் தொகைகள், அவ்வாறு நிர்ணயிக்கப்படும் எந்த அதியுச்சத் தொகையும் அந்த உட்பந்தியில் குறிப்பிடப்பட்ட நோதான அதியுச்சத்துக்குக் குறையாததாக இருக்கும் பட்சத்தில், ஏற்றிச் செல்பவருக்கும் அல்லது ஏற்றிச் செல்பவரின் கப்பற்றலைவருக்கும் அல்லது முகவருக்கும், கப்பலேற்றுபவருக்கும் இடையிலான உடன்படிக்கை மூலம் நிர்ணயிக்கப்படலாம்.

(ஏ) பண்டங்களின் தன்மையைப்பற்றி அல்லது பெறுமதியைப்பற்றிக் கப்பலேற்றுபவர் ஏற்றுபொருள் உண்டியலில் வேண்டுமென்று தவருகக் கூறப்பட்டிருந்தால் அப்பண்டங்களுக்கு அல்லது அப்பண்டங்கள் தொடர்பில் நேரும் ஏதேனும் இழப்புக்கு அல்லது சேதத்துக்கு ஏற்றிச் செல்பவரோ, கப்பலோ எச்சந்தர்ப்பத்திலும் பொறுப்புடையதாதலாகாது.

6. எளிதிற் தீப்பற்றக்கூடிய, வெடிக்குமியல்புடைய அல்லது அபாயகரமான தன்மையுள்ள எப்பண்டங்களைக் கப்பலேற்றுவதற்கு ஏற்றிச் செல்பவர், ஏற்றிச் செல்பவரது கப்பற்றலைவர் அல்லது முகவர் அவற்றின் தன்மையும் குணமும் பற்றி அறிந்துகொண்டு சம்மதமளிக்காதிருந்துள்ளாரோ அப்பண்டங்கள் அவை உரிய இடத்தில் இறக்கப்படுவதற்குமுன்னரான எந்நேரத்திலும், இழப்பீடெதுவுமின்றி, ஏற்றிச்செல்பவரால் எவ்விடத்திலும் இறக்கப்படலாம் அல்லது அழிக்கப்படலாம் அல்லது விபத்து விளைக்காதனவாக்கப்படலாம்; அத்துடன், அத்தகைய பண்டங்களைக் கப்பலேற்றுபவர், அத்தகைய கப்பலேற்றுகையால் அல்லது அதுகாரணமாக நேரடியாக அல்லது மறைமுகமாக எழும் எல்லாச் சேதங்களுக்கும் செலவுகளுக்கும் பொறுப்புடையவராதல்வேண்டும். அத்தகைய அறிவுடனும் சம்மதத்துடனும் கப்பலேற்றப்பட்ட எவையேனும் அத்தகைய பண்டங்கள் கப்பலுக்கோ அல்லது கப்பற் சரக்குக்கோ ஆபத்தானவையாகவருமாயின், அப்பண்டங்கள் அதே முறையாக, பொதுச் சராசரிப் பகிர்வுக்குத் தவிர, ஏற்றிச் செல்பவருக்கு வேறு பொறுப்பு எதுவுமின்றி, ஏற்றிச்செல்பவரால் எவ்விடத்திலும் இறக்கப்படலாம் அல்லது அழிக்கப்படலாம் அல்லது விபத்து விளைக்காதனவாக்கப்படலாம்.

## உறுப்புரை IVஅ

1. இவ்விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிர்வாதங்களும், பொறுப்புத் தொடர்பான மட்டுப்படுத்துகைகளும், ஏற்றிச்செல்லல் ஒப்பந்தமொன்றினுல் உள்ளடக்கப்படும் பண்டங்களுக்கான இழப்பு அல்லது சேதம் தொடர்பில் ஏற்றிச் செல்பவருக்கு எதிராகக் கொணரப்படும் எவ்வழக்குக்கும், அவ்வழக்கு ஒப்பந்தச் சட்டப்படி கொணரப்பட்டாலுஞ்சரி அல்லது தீங்கியற் சட்டப்படி கொணரப்பட்டாலுஞ்சரி, ஏற்புடையனவாதல் வேண்டும்.

2. அத்தகையவொரு வழக்கு, ஏற்றிச்செல்பவரின் (தன்னுரிமைக்கமுடைய ஒப்பந்தக்காரரொருவராயில்லாத சேவையாளர் அல்லது முகவரான) சேவையாளருக்கு அல்லது முகவருக்கு எதிராகக் கொணரப்படும்போது அத்தகைய சேவையாளர் அல்லது முகவர், இவ்விதிகளின் கீழ் ஏற்றிச் செல்பவரால் துணைநாடப்படக்கூடிய எதிர்வாதங்களையும் பொறுப்புத் தொடர்பான மட்டுப்படுத்துகைகளையும் தாமும் பயன்படுத்தலாம்.

3. அந்த ஏற்றிச்செல்பவரிடமிருந்தும், அத்தகைய சேவையாளரிடமிருந்தும் முகவரிடமிருந்தும் அறவிடப்படற்பாலனவான தொகைகளின் கூட்டு மொத்தமானது, எச்சந்தர்ப்பத்திலும் இவ்விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள வரையறையை விஞ்சுதலாகாது.

4. ஆயினும், சேதம் விளைவிப்பதற்கான கருத்துடன், அல்லது அசட்டுத் துணிவுடனன கவனமின்மையுடனும், பெரும்பாலும் சேதம் விளையுமெனும் அறிவுடனும் ஆன, ஏற்றிச் செல்பவரது சேவையாளரொருவரின் அல்லது முகவரொருவரின் செயலொன்றினுல் அல்லது செய்யாமையினுல் சேதம் விளைந்ததெனஎண்பிக்கப்பட்டால், அச்சேவையாளர் அல்லது முகவர் இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகளைத் தாம் பயன்படுத்துவதற்கு உரித்துடையவராதலாகாது.

## உறுப்புரை V

ஏற்றிச்செல்பவர் இவ்விதிகளின்கீழ் அவரது உரிமைகள், விடுபாட்டுரிமைகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையேனும் முழுமையாக அல்லது பகுதியளவில் கையொப்படைப்பதற்கு, அல்லது அவரது பொறுப்புக்கள், கடப்பாடுகள் என்பனவற்றுள் எதனையேனும் அதிகரிப்பதற்குச் சுதந்திரமுடையவராதல் வேண்டும்; எனினும், அத்தகைய கையொப்படைப்பு அல்லது அதிகரிப்பு கப்பலேற்றுபவருக்கு வழங்கப்படும் ஏற்றுபொருளுண்டியலில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். இவ்விதிகளின் ஏற்பாடுகள் கப்பல் வாடகை ஒப்பந்தங்களுக்கு ஏற்புடையனவாதலாகா. ஆனால், கப்பல் வாடகை ஒப்பந்தத்தின்கீழான கப்பலொன்று தொடர்பாக ஏற்றுப்பொருள் உண்டியல்கள் வழங்கப்படுமாயின், அவை இவ்விதிகளினது, நியதிகளுக்கிணங்கியொழுகுதல் வேண்டும். பொதுச் சராசரிப் பகிர்வு தொடர்பான சட்டமுறையான ஏற்பாடு எதுவும் ஏற்றுப் பொருள் உண்டியலிற் சேர்த்துக்கொள்ளப்படுதலை இவ்விதிகளிலுள்ளது எதுவும் தடுப்பதாகக் கொள்ளப்படுதலாகாது.

## உறுப்புரை VI

முற்போந்த உறுப்புரைகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஏற்றிச்செல்பவரும் அல்லது ஏற்றிச் செல்பவரது கப்பற்றலைவரும் அல்லது முகவரும், கப்பலேற்றுபவரும், எவையேனுங் குறிப்பான பண்டங்கள் தொடர்பில், (இப்பொருத்தனை பொதுக்கொள்கைக்கு முரணானதாக அமையாதிருக்கும் அளவுக்கு) அத்தகைய பண்டங்களுக்கான ஏற்றிச்செல்பவரது வகைசொலற் பொறுப்பு அல்லது பொறுப்பு தொடர்பிலானவையும், அத்துடன் அத்தகைய பண்டங்கள் பற்றிய ஏற்றிச் செல்பவரது உரிமைகள், விடுபாட்டுரிமைகள் தொடர்பிலானவையும், அல்லது கடல்வழிச் செல்லற்றகுதி பற்றிய கடப்பாடு தொடர்பானவையும் அல்லது கடல்வழியாக ஏற்றிச்செல்லப்படும் பண்டங்களைக் கப்பலில் ஏற்றுதல், கையாளுதல், களஞ்சியப்படுத்தல், ஏற்றிச்செல்லுதல், கட்டுக்காப்பில் வைத்திருத்தல், கவனிப்பு எடுத்தல், இறக்குதல் தொடர்பாக அவரது சேவையாளர்களுக்கு அல்லது முகவர்களுக்கு உள்ள கவனம் அல்லது விழிப்புக் கவனம் தொடர்பிலானவையுமான எந்நியதிகளையும் கொண்ட ஏதேனும் உடன்படிக்கையைச் செய்துகொள்ளுவதற்குச் சுதந்திரமுடையவர்களாதல் வேண்டும். எனினும், இச்சந்தர்ப்பத்தில், ஏற்றுப் பொருள் உண்டியல் எதுவும் வழங்கப்பட்டிருத்தல் அல்லது வழங்கப்படுதல் ஆகாது என்பதுடன், உடன்பட்டுக் கொள்ளப்பட்ட நியதிகள், உரிபெயர்க்கத்தகாத ஆவணமொன்றாகவும் அத்தகையதென அடையாளமிடப்பட்டதுமாக இருப்பதான பற்றுச்சீட்டொன்றில் உள்ளடக்கப் பெற்றிருத்தலும் வேண்டும். அவ்வாறு செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை எதுவும் பூரண சட்டவலுவுடையதாதல் வேண்டும் :

ஆயின், வியாபாரத்தின் சாதாரண நெறிமுறையின்போது செய்யப்பட்ட சாதாரண வர்த்தகக் கப்பலேற்றுகைகளுக்கு இவ்வுறுப்புரை ஏற்புடைத்தாதலாகாது ; ஆனால், ஏற்றிச் செல்லப்படுவதற்கான ஆதனத்தின் பண்பு அல்லது நிலைமை, அல்லது ஏற்றிச்செல்லுகை எச்சூழ்நிலைகள், நியதிகள், நிபந்தனைகளின் கீழ் புரியப்படவேண்டியுள்ளதோ அச்சூழ்நிலைகள், நியதிகள், நிபந்தனைகள், சிறப்பு உடன்படிக்கையொன்று செய்யப்படுதலை நியாயபூர்வப்படுத்தும் அத்தகையனவாகவுள்ளவிடத்தான அத்தகைய வேறு கப்பலேற்றுகைகளுக்கு மட்டுமே ஏற்புடையனவாதல் வேண்டும்.

## உறுப்புரை VII

பண்டங்கள் கடல்மார்க்கமாக ஏற்றிச்செல்லும் கப்பலில் அவற்றை ஏற்றுவதற்கு முன்னரும், அக்கப்பலிலிருந்து அவற்றை இறக்கியதன்பின்னரும், அவற்றின் கட்டுக்காப்பு, கவனிப்பு, கையாளுகை தொடர்பில், அல்லது அதனோடு தொடர்புபட்ட இழப்புக்கான அல்லது சேதத்துக்கான ஏற்றிச் செல்பவரது அல்லது கப்பலின் வகைசொலற் பொறுப்பு, பொறுப்பு என்பன பற்றிய ஏதேனும் உடன்படிக்கையை, பொருத்தனையை, நிபந்தனையை, ஒதுக்குகையை அல்லது விலக்களிப்பை ஏற்றிச்செல்பவர் அல்லது கப்பலேற்றுபவர் செய்து கொள்ளுதலை இதன்கண் அடங்கியுள்ளது எதுவும் தடைசெய்தலாகாது.

## உறுப்புரை VIII

கடல்வழிச் செல்லும் கலன்களின் சொந்தக்காரர்களுக்குள்ள பொறுப்பை மட்டுப்படுத்துதல் தொடர்பில் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் நியதிச் சட்டத்தின்கீழ் ஏற்றிச்செல்பவருக்குள்ள உரிமைகளையும் கடப்பாடுகளையும் இவ் விதிகளின் ஏற்பாடுகள் பாதித்தலாகா.

## உறுப்புரை IX

இவ்விதிகளானவை, அணுசக்திச் சேதத்துக்கான பொறுப்பை ஆள்வதான ஏதேனும் சர்வதேசச் சமவாயத்தை அல்லது தேசிய சட்டத்தைப் பாதித்தலாகா.

## உறுப்புரை X

இவ்விதிகளின் ஏற்பாடுகளானவை, கப்பலின், ஏற்றிச்செல்பவரின், கப்பலேற்றுபவரின், ஒப்படைபெறுநரின் அல்லது அக்கறையுள்ளவரான வேறு எவரேனும் ஆளின் தேசியத்துவம் எதுவாக இருப்பினும்,—

(அ) அந்த ஏற்றுப்பொருள் உண்டியல் ஒப்பந்தமுறு அரசொன்றில் வழங்கப்படுமெனில் ; அல்லது

(ஆ) ஏற்றிச்செல்லுகையானது ஒப்பந்தமுறு அரசொன்றிலான துறைமுகத்திலிருந்து தொடங்குவதெனில் ; அல்லது

(இ) அந்த ஏற்றுபொருள் உண்டியலில் அடங்கியுள்ள அல்லது அதனால் சான்றுபடுத்தப்பட்ட ஒப்பந்தமானது, இவ்விதிகள் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் ஏதேனும் அரசின் சட்டவாக்கம் ஒப்பந்தத்தை ஆளவுள்ளது என ஏற்பாடுசெய்திருக்குமெனில்,

இரு வேறான அரசுகளில் உள்ள துறைமுகங்களுக்கிடையில் பண்டங்களை ஏற்றிச் செல்லுதல் தொடர்பிலான ஏற்றுபொருள் உண்டியல் ஒவ்வொன்றுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.